**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2014/2015 (January/February 2018)**

---

## GYS 2123 பிரதேசக் கற்கைகள் (Regional Studies)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

தென்னாசிய புறவுருவப்படம் வழங்கப்படும்.

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

1. அ) தென்னாசிய நாடுகளின் பிரதான நிலத்தோற்ற அம்சங்களை புறவரிப்படத்தில் வரைந்து நிறந்தீட்டி வேறுபடுத்திக் காட்டுக.

(10 புள்ளிகள்)

ஆ) உலக நிலத்தோற்ற அமைப்புக்களுடன் தென்னாசிய நாடுகளது நிலத்தோற்ற அமைப்பை ஒப்பிடும் போது காணப்படும் தெளிவான வேறுபாடுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

2. அ) தென்னாசிய நாடுகளின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் குறைந்தது ஐந்தினை (05) பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

ஆ) நீர் குறிப்பிட்ட காரணிகளில் யாதாயினும் ஒன்றினைத் தெரிவு செய்து அக்காரணி எவ்வகையில் காலநிலையில் பருவரீதியான மாற்றங்களை உண்டுபண்ணுகின்றது என்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

3. தென்னாசிய நாடுகளினது மழைவீழ்ச்சிப் பரம்பல் போக்கினை அளவீடுகளின் அடிப்படையில் வரைந்து காட்டுவதுடன் வேறுபட்ட மழைவீழ்ச்சிப் பரம்பலுக்கான காரணங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

## பகுதி II

4. அ) இந்தியா சுதந்திரம் அடைந்த காலப்பகுதியை அடுத்து விவசாயத்துறை எதிர்கொண்ட சவால்களை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஆ) "இந்திய விவசாயத்தில் காணப்பட்ட பிரச்சினைகளைப் போக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் ஐந்தாட்டுத் திட்டமும் முக்கியமானதாகும்." இக்கூற்றினடிப்படையில் 1951 -1966 வரையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் விவசாயத்துறை விருத்திக்கு எந்தளவிற்குப் பங்களித்துள்ளது என்பது தொடர்பாக விளக்குக. (15 புள்ளிகள்)

5. "உழுபவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்ற உயரிய சிந்தனை அடிப்படையி உருவான திட்டமே நிலச்சீர்திருத்தமாகும்" இக்கருத்து இந்திய விவசாயத்துறையி எந்தளவிற்கு பங்காற்றியுள்ளது என்பதனை பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

6. "தென்னாசிய நாடுகளில் காணப்பட்ட உணவுப்பற்றாக்குறையை நீக்குவதற்கு பசுமை புரட்சியானது பாரியளவிற்கு பங்களித்துள்ளது." இக்கூற்றிற்கான ஆதாரங்கள ஏதாவதொரு தென்னாசிய நாட்டினை உதாரணமாகக் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) சீனாவின் குடித்தொகைக் கொள்கைகளும் தாக்கங்களும்

ஆ) ஜப்பானில் விவசாய துறையில் நவீன தொழிநுட்பங்கள்

இ) தென்னாசிய நாடுகளில் நகராக்கல் பிரச்சினைகள்

(2x10=20 புள்ளிகள்)